<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மழைநீர் சேமிப்பு இயக்கத்தில் பொதுமக்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

2. அரசு ஊழியர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் உற்பத்தி 5 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சத்திஷ்கடில் இன்று காலமான பிரபல Pandavani பாடகரும், பத்மவிபூஷன் விருது பெற்றவருமான டாக்டர் Teejan Bai-யின் இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று நடைபெற்றன.

5. இலங்கை-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>>><<<<<<

மழைநீர் சேமிப்பு இயக்கத்தில் பொதுமக்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

நாடுமுழுவதும் நீர்வளம் குறைவாக உள்ள 256 மாவட்டங்களில் நீர் சேமிப்பு இயக்கம் 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாக நீர்வளத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

2021ஆம் ஆண்டு, மழைநீர் சேமிப்பு இயக்கத்தை பிரதமர் தொடங்கி வைத்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமுதாய பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னர் இந்த இயக்கம் மாற்றியமைக்கப்பட்டதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

உடல்நலனை சீராக பராமரிக்க சைக்கிள் பயிற்சி உதவிடும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

ஞாயிறுதோறும் சைக்கிள் பயணம் இயக்கத்தின் கீழ், இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சைக்கிள் பயணத்தால் ஏற்படும் நன்மைகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

சுற்றுச்சூழல் பாதிப்பை தடுப்பதற்கும் இது உதவிடும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>><<<<<<

அரசு ஊழியர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தம்மை சந்தித்த பாரதீய மஸ்தூர் சங்க பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

அலுவலர்களின் பிரச்சினையை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதில் இதுபோன்ற சங்கங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற கலந்துரையாடல்கள், அரசு ஊழியர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயனளிக்கும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>><<<<<<

20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் உற்பத்தி 5 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2014ஆம் ஆண்டு 421 கோடி லிட்டராக இருந்த இந்த வகை பெட்ரோல் உற்பத்தி தற்போது 2 ஆயிரம் கோடி லிட்டரை எட்டியுள்ளதாக பெட்ரோலியத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், எத்தனால் கலந்த பெட்ரோல் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கச்சா எண்ணெய் இறக்குமதி வெகுவாக குறைந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அந்நிய செலாவணி சேமிப்பு கிடைத்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஆந்திராவில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று Srikakulam மாவட்டத்தின் Nimmada கிராமத்தில் இப்பணிக்கான தமது படிவத்தினை தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பித்த பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

எவ்வித குளறுபடியும் இன்றி வாக்காளர் பட்டியலை தயாரிப்பதற்கு சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

தேர்தல் நடைமுறைகள் நேர்மையாக நடைபெறுவதை உறுதி செய்வதில், வாக்காளர் பட்டியல் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தில் தனியார் நிறுவனத்தின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி பிரிவிற்கான கட்டுமானப் பணிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியாவுடன் இணைந்து இன்று தொடங்கி வைத்தார்.

இந்த உற்பத்திப் பிரிவு, Shivpuri மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுயசார்பு இந்தியா மற்றும் உற்பத்திக்கான இந்தியா இயக்கங்களுக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங், ஜெனீவா புறப்பட்டுச் சென்றார்.

ஐ.நா சார்பில் நடைபெறவுள்ள இந்த உச்சிமாநாடு, நாளை தொடங்குகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பாக ஐ.நா சார்பில் நடைபெறும் முதல் உச்சி மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

கர்நாடகாவில், மத்திய ஊரக வளர்ச்சித்துறையின் திட்டங்களின் செயலாக்கம் குறித்து, மூத்த அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று தொடங்கிய இந்த ஆய்வுப் பணி, வரும் 11ஆம் தேதிவரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் தொடர்பாகவும் இக்குழுவினர் ஆய்வு மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<<

*சத்திஷ்கடில், பிரபல Pandavani பாடகரும், பத்மவிபூஷன் விருது பெற்றவருமான டாக்டர் Teejan Bai இன்று அதிகாலை ராய்ப்பூரில் காலமானார். அவருக்கு வயது 70.*

*உடல்நலக் குறைவு காரணமாக, ராய்ப்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.*

*டாக்டர் Teejan Bai-யின் இறுதிச்சடங்குகள், அவரது சொந்த ஊரான Ganiyari கிராமத்தில் முழு அரசு மரியாதையுடன் இன்று மாலை நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*அஸ்ஸாம் சட்டப்பேரவையில் அலுவல் மொழியாக ஹிந்தியும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பேரவைத் தலைவர் திரு. ரஞ்சித் குமார் தாஸ் கூறியுள்ளார்.*

*இன்று குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அலுவல் ஆய்வு குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.*

*தற்போது, ஆங்கிலம் மற்றும் Bodo மொழிகள் அலுவல் மொழிகளாக பயன்பாட்டில் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*நாளை தொடங்கவுள்ள பட்ஜெட் கூட்டத் தொடரின் போது அலுவல் மொழியாக ஹிந்தியும் அறிமுகப்படுத்தப்படும் என்று திரு. ரஞ்சித் குமார் தாஸ் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*தில்லியில் உள்ள அரசு பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பள்ளி வளாகங்களை தூய்மையாக பராமரிப்பதோடு, நவீன வசதிகள் இடம்பெறுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த இயக்கம் செயல்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ளார்.*

*பள்ளி வளாகங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதில், மக்கள் பங்களிப்பும் இன்றியமையாதது என்று திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*அமர்நாத் யாத்திரிகர்களின் நலனுக்காக, ஜம்மு-ஸ்ரீநகர் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக ரயில்வே அறிவித்துள்ளது.*

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த ரயில்வேயின் ஸ்ரீநகர் கோட்ட மேலாளர் திரு. கபில் சர்மா, கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்கு தேவையான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. நிதின் நபின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று லக்னோவில் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சி தலைவர்களிடையே ஆலோசனை மேற்கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. நிதின் நபின் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

பீகாரின் Pankipur சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் Jan Suraj கட்சியின் சார்பில் அதன் நிறுவனர் திரு. பிரசாந்த் கிஷோர் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் வரும் 30ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

இலங்கை-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Galle-ல் நடைபெற்ற இப்போட்டியின் நான்காவது மற்றும் இறுதிநாளான இன்று இந்தியா-ஏ அணி முதல் இன்னிங்ஸில் 543 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

சாய் சுதர்ஸன் அபாரமாக ஆடி, 168 ரன் குவித்தார்.

Keshara Nuwantha 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர், இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இலங்கை-ஏ அணி 209 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக Ashen Bandara 87 ரன் எடுத்தார்.

Gurnoor Brar அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, 33 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இந்தியா-ஏ அணி விக்கெட் இழப்பின்றி 36 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இதன்மூலம், இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை 1-0 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

>>>>>><<<<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

இஸ்தான்புல்லில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Swastika Ghosh – Taneesha Kotecha இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 11-8, 11-8, 11-7 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் Shuohan Men - ஸ்லோவேனியாவின் Ana Tofant இணையை வென்றது.

>>>>>><<<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜப்பானின் Hiroko Kuwata இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

உலக கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா இன்று லெபனானை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

உலக பேட்மிண்டன் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

>>>>>>END<<<<<<